முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026

இஸ்லாம்	Grade 12	T	44	இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும; (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.

1. துணை மூலாதாரங்களில் முதன்மையானது
(1) இஜ்மா (2) கியாஸ் (3) இஜ்திஹாத் (4) இஸ்திஹ்ஸான் (5) உர்பு

2. ஸக்காத்துடன் தொடர்பான விடயங்களுள் "நிஸாப்" எனப்படுவது
(1) ஸக்காத் கொடுக்கும் கால எல்லை
(2) ஸக்காத்தின் காலவரையறை
(3) ஸக்காத் கொடுக்கும் சட்டம்
(4) ஸக்காத் விதியாகும் உச்ச அளவு
(5) ஸக்காத் வசூலிக்கும் நபர்கள்

3. வஹி மத்லுவ் என்பதற்குரிய உதாரணம்
(1) முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஹிரா குகையில் வைத்துக்கிடைத்த முதல் வஹி
(2) இப்ராஹீம் நபி அவர்களின் கனவு
(3) உயிரிணங்களின் உள்ளத்தில் இறைவன் இடும் உள்ளுணர்வு
(4) மூஸா (அலை) அவர்களின் தூர்ஸினா மலையில் கேட்ட அசரீரி வார்த்தை
(5) நபி அவர்களின் ஹதீஸ்கள்

4. இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை உள்ளடக்கிய தொகுதி
(1) இஜ்மா , கியாஸ் (2) அல்குர்ஆன், அல்ஹதீஸ் (3) தௌஹீத், ரிஸாலத் , மஆத்
(4) ஷரீஆ, தீன், முஆமலாத் (5) தொழுகை, ஸகாத், நோன்பு

5. தொழுகையைப் போன்று பின்பற்ற வேண்டிய மற்றையது
(1) பர்ழு (2) வாஜிப் (3) ஷர்த்து (4) சுன்னத் (5) ஜாயிஸ்

6. 501 ஆடுகளை வைத்திருக்கும் ஒருவர் வருட முடிவில் கொடுக்க வேண்டிய நிஸாபின் அளவு
(1) 4 ஆடுகள் (2) 3 ஆடுகள் (3) 5 ஆடுகள்
(4) 2 வயது பூர்த்தியான காளைமாடு (5) யாவும் பிழை

7. தகிய்யா கோட்பாட்டை நம்புவோர்
(1) மு.ஃதஸிலா (2) ஷீஆ (3) கதரிய்யா (4) ஜபரிய்யா (5) முர்ஜிய்யா

8. அஷ்அரிய்யாக்கள் எந்த மத்ஹபை பெரும்பாலும் பின்பற்றுகின்றார்கள்
(1) ஷாபிஈ (2) மாலிகி (3) ஹன்பலி (4) ஹனபி (5) ஜ.ஃபரி

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

9. நபி (ஸல்) அவர்களை நேசித்தல் எனும் கருத்தைத் தரும் சொற்றொடர்
(1) அஹ்லுல் பைத் (2) இதாஅதுர்ரசூல (3) அஹ்லுஸ்ஸுப்பா (4) மஹப்பதுர்ரசூல் (5) மஹப்பதுல்லாஹ்

10. கியாஸின் பயன்களை உள்ளடக்கிய தொகுதி
(A) இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.
(B) புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குகிறது.
(C) எல்லாக் காலத்திலும் தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற உதவுகிறது.
(D) பகுத்தறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பு வழங்கப்பட துணைபுரிதல்
1) ABCD 2) ABDE 3) ABCE 4) ACDE 5) BCDE

11 தொடக்கம் 13 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் X Y எனும் நிரல்களின் கீழ் தரப்பட்டுள்ளவற்றைத் தொடர்புபடுத்தினால் X நிரலிலுள்ளவை Y நிரலிலுள்ளவற்றுடன் சரியாகப் பொருத்தி வரும் சேர்மானத் தொகுதியைத் தெரிவு செய்க.

11.

	X	Y
I.	இல்ம்	A. நாட்டம்
II.	இராதத்	B. ஆற்றல்
III.	குத்ரத்	C. அறிவு
IV.	கத்ர்	D. முன்னேற்பாடு
V.	கழா	E. நிறைவேற்றுதல்

(1) C D A E B (2) C D E A B (3) C E A D B (4) C A B D E (5) C D E B A

12.

	X	Y
I.	அல்லரரு யுஸாலு	A. உறுதியான நிலைப்பாட்டை இடையில் ஏற்படும் சந்தேகம் மாற்றாது
II.	அல் உமூரு பிமகாஸிதஹா	B. சிரமம் சட்டங்களைத் தளர்த்தும்
III.	அல்யகீனு லா யுஸாலு பிஷ்ஷக்	C. வழக்காறு ஒரு சட்டமூலாதாரமாகும்
IV.	அல்மஷக்கது தஜல்லிபுத் தய்ஸீர்	D. நோக்கங்களைப் பொறுத்தே செயற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன
V.	அல் ஆதது முஹக்கமா	E. தீமை நீக்கப்பட வேண்டும்

(1) D C E A B (2) B D E A C (3) E D A B C (4) B D C E A (5) D C A B E

13.

	X	Y
I.	அல் - இஸ்திஹ்ஸான்	A. சமூக நலனை ஆதாரமாகக் கொள்ளல்
II.	அல் - உர்பு	B. பொது விதியாக வந்துள்ள முடிவிற்குப் பதிலாக சிறியதொரு நலனுக்கு முன்னுரிமை வழங்குதல்
III.	அல் - இஸ்திஸ்ஹாப்	C. மனித சமூகத்தில் நலிசமானோர் வாழ்வில் செயல் ரீதியாக அல்லது சொல் ரீதியாக பின்பற்றி வரும் மரபு
IV.	மஸ்லஹா முர்ஸ்லா	D. ஏற்கனவே உறுதியாக நிறுவப்பட்ட ஒரு விடயத்தை அல்லது மறுக்கப்பட்ட ஒரு விடயத்தை தொடர்ந்தும் அதே நிலையில் வைத்துக் கொள்ளல்
V.	ஷராஇஉஸ் ஸாபிகா	E. முன்னைய நபிமார்கள் பின்பற்றிய மார்க்க சட்டங்கள்

(1) BCADE (2) BCEDA (3) CBEAD (4) CBEDA (5) BCDAE

14. "ஷபாஅதுல் உழ்மா" என்பது
(1) பெரிய மன்றாட்டம் (2) பாவ மன்னிப்பு (3) சிறிய மன்றாட்டம் (4) சாபமிடல் (5) பரிந்துரை

15. மஸீஹ் எனும் பெயரால் அழைக்கப்படும் இருவர்
(1) ஜிப்ரீல் (அலை), முஹம்மத் (ஸல்) (2) ஈஸா (அலை), மஹ்தி (அலை)
(3) ஈஸா (அலை), தஜ்ஜால் (4) முன்கர் (அலை), நகீர் (அலை) (5) ஈஸா (அலை), மர்யம் (அலை)

முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

16. சுவர்க்கத்தின் பெயர்களுள் அடங்கும் தொகுதி
(A) நஈம் (B) தாருல் ஹுல்த் (C) முகாமா (D) ஸஈர் (E) பிர்தௌஸ்

(1) ABCE (2) BCDE (3) DAEB (4) ADBC (5) AEDC

17. இறுதி ஹஜ்ஜின் போது நபியவர்கள் வலியுறுத்திய விடயங்களின் தொகுதி
(A) அஜமியையும் விட அரபி மேலானவன்

(B) பழிக்குப் பழி பாவமாகும்

(C) வட்டி தடுக்கப்பட்டுள்ளது.

(D) அடிமைகள் விடயத்தில் நீதமாக நடந்து கொள்ளுங்கள்

(E) பெண்ணுரிமையைப் பேணிக் கொள்ளுங்கள்

(1) BCDE (2) ACBE (3) ABCD (4) ACDE (5) ABDE

18. அல்குர்ஆனைப் பாதுகாக்கும் முயற்சியில் மிக அதிகமாகப் பங்களிப்புச் செய்தவர்
(1) முஆவியா (ரழி) (2) அபூஹுரைரா (ரழி) (3) முஸ்அப் இப்னு உமைர் (ரழி)
(4) ஸைத் இப்னு ஸாபித் (ரழி) (5) ஹஸன் (ரழி)

19. கலீபாவாகவும் முஜ்தஹிதாகவும் கருதப்படுபவர்
(1) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) (2) உமர் இப்னு ஹத்தாப் (ரழி) (3) முஹம்மத் அல் பாதிஹ்

(4) சுல்தான் ஸலாஹுத்தீன் (5) சுல்தான் அப்துல் ஹமீத்

20. ஆலிமுல் குறைஷ், இமாமுல் அ.ஃலம் என அழைக்கப்பட்ட இரு இமாம்களும் முறையே

(1) இமாம் ஷாபிஈ , மாலிக் (ரஹ்) (2) இமாம் அபூனீபா, இமாம் மாலிக் (ரஹ்)

(3) இமாம் ஷாபிஈ, அபூனீபா (ரஹ்) (4) இமாம் மாலிக், அஹ்மத் இப்னு ஹம்பல் (ரஹ்)

(5) இமாம் ஷாபிஈ, இமாம் அஹ்மத் இப்னு ம்பல் (ரஹ்)

21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிகளுக்கு பின்வரும் 1, 2, 3, 4, 5 என்பவற்றின் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

இல	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
1.	சரியானது	சரியானது
2.	சரியானது	பிழையானது
3.	பிழையானது	சரியானது
4.	பிழையானது	பிழையானது
5.	சரியானது	முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது

இல	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
21.	இமாம் அபுல் ஸன் அஷ்அரி (ரஹ்) அவர்கள் நாஸிருஸ் ஸுன்னா என மக்களால் அழைக்கப்பட்டார்.	அலி (ரழி) அவர்களை விட உஸ்மான் (ரழி) அவர்களையே கிலாபத்திற்கு முற்படுத்த வேண்டியவர் என்ற நிலைப்பாட்டை ஷீயாக்கள் கொண்டிருந்தனர்.
22.	"தஸவ்வுப்" கலை பிக்ஹுல் அக்பர் என்று அழைக்கப்படுகிறது.	இமாம் அபுல் ஹஸன் என்பவரே ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர்.
23.	வாஸில் பின் அதாஉ இமாம் ஹஸனுல் பஸரியின் ஆசிரியராவார்.	மு.ஃ.தஸிலாக்கள் எப்போதும் குர்ஆன் ஸுன்னாவின் கருத்துக்களையே முதன்மைப்படுத்தினர்.
24.	பிக்ஹுத் துறையில் ஈடுபடும் அறிஞர்கள் ஹதீஸ் துறையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.	இமாம் மாலிக் (ரஹ்), இமாம் ஷாபிஈ ஆகியோர் ஹதீஸ், பிக்ஹு ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.
25	"ஸுன்னாவின் துணையின்றி குர்ஆனை சிறப்பாக விளங்க முடியும்."	ஹுரூபுல் முகத்தஆத் என்பதன் பொருளை திட்டமாக தப்ஸீர் அறிஞர்களால் விளக்கி கூற முடியும்.

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026

இஸ்லாம்	Grade 12	T	44	மூன்று மணித்தியாலம்

பகுதி II

அறிவுறுத்தல்: "அ" பகுதியிலிருந்து ஒரு வினாவையும் "ஆ" பகுதியிலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

"அ" பகுதி

1.

(i) "இபாதா" பற்றிய எண்ணக்கருவை விளக்குக."

(2 புள்ளிகள்)

(ii) "அடிப்படை இபாதத்துக்கள் நற்பண்புகளை வளர்க்கின்றன" எனும் கருத்தை ஆதாரங்களுடன் விளக்குக.

(4 புள்ளிகள்)

(iii) அடிப்படை வணக்கங்களினால் ஏற்படும் ஆன்மீக, லௌகீக பயன்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

(iv) ஆன்மீக மேம்பாட்டுக்கு தடையாக உள்ள 4 அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டு விடயங்களை அன்றாட வாழ்வில் எவ்வாறு தவிர்த்து கொள்வது என்பது பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

2.

(i) இஜ்திஹாத் என்றால் என்ன?

(2 புள்ளிகள்)

(ii) ஒரு முஜ்தஹிதிடம் இருக்க வேண்டிய தகைமைகளை பட்டியல் இட்டு விளக்குக.

(4 புள்ளிகள்)

(iii) சட்டவாக்கத்தில் இஜ்திஹாதின் பங்களிப்பை உதாரணங்களுடன் தெளிவுப்படுத்துக.

(6 புள்ளிகள்)

(iv) ஒரு முஸ்லிம் கருத்து வேறுபாடான விடயங்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை விளக்கி எழுதுக.

(8 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

பகுதி "ஆ"

3.

(i) ஒரு முஸ்லிமின் அன்றாட வாழ்வில் ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் ஆகியவை பற்றி விளக்குக.

(7 புள்ளிகள்)

(ii) உயிரினங்களுக்கு கருணை காட்டல், பௌதீக வளங்களைப் பாதுகாத்தல் ஆகிய இரண்டு தொடர்பாகவும் இஸ்லாமிய போதனைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

(8 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

4.

(i) ரப்பானிய்யா, ரஹ்பானிய்யா சொற்பிரயோகங்களை தஸவ்வுப் துறையோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(7 புள்ளிகள்)

(ii) தஸ்கியதுன் நப்ஸின் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் விளக்குக.

(8 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

5.

(i) மகாஸிதுஷ் ஷரீஆவின் மூன்று படிநிலைகளையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(7 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை அல்குர்ஆன் சுன்னா ஆதாரங்களுடன் விளக்குக.

(8 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

6.

பின்வரும் விடயங்கள் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) மஹப்பத்துர்ரஸூல் (5 புள்ளிகள்)

(ஆ) தவக்குல் (5 புள்ளிகள்)

(இ) ஸுஹ்த் (5 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library